# பட்டுக்கோட்டை நகராட்சி

**ஸ்ரீ விளம்பி வருடம் தை மாதம் 17–ம் தேதி திருவள்ளுவராண்டு 2047 (2019–ம் ஆண்டு ஜனவரி 31ம் தேதி) வியாழன் கிழமை காலை 12.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. சே.அலாவுதீன், எம்.ஏ.,**
**தனி அலுவலர்/ ஆணையர்.**

**பொருள் எண்..1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.22866/பி.3/2018 நாள்.23.08.2018 ன் படி தூய்மை இந்தியா இயக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பட்டுக்கோட்டை நகராட்சியில் ரூ.531.00 இலட்சத்தில் 8 பணிகள் செயல்படுத்த நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு (GOI Share 35%) (State Share 55%) (ULB Share 10%) அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. இதற்கு நகர்மன்ற தீர்மான எண்.496 நாள்.24.8.2018 ன் படி அனுமதியும் (ULB Share 10%) ரூ.53.10 இலட்சம் நகராட்சி பங்கு தொகை பயன்படுத்திகொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தூய்மை பாரத திட்டம் (SBM) 2018–19ன்கீழ் கீழ்கண்ட பணிக்கு மூன்றாம் அழைப்பாக 27.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| சிப்பம் எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி | தகுதி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1. | 9 எண்ணிக்கையிலான Light commercial vehicle 2.0 cum capacity with box tipper BS4 வாகனம் வாங்குதல் பணி. | 50.40 | Krysttal Motors(P) Ltd, Salem -5 | தகுதியுள்ளவர் | மதிப்பீட்டை விட 1.00 % குறைவு |
| | | | ABT Industries Ltd, Coimbatore -1 | தகுதி இல்லை | ---- |
| | | | K.Senthilkumar, Agilandapuram, Pollachi | தகுதி இல்லை | ---- |
| | | | VAMBSK FABS Coimbatore-25 | தகுதியுள்ளவர் | மதிப்பீட்டை விட 4.95% அதிகம் |
| | | | Sakthi Body Works, Chennai -56 | தகுதியுள்ளவர் | மதிப்பீட்டை விட 4.98% அதிகம் |

வரப்பெற்ற தொழில்நுட்ப தகுதி வாய்ந்த மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதப்பட்டியலை (Price Bid) ஒப்பிட்டு பார்த்ததில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள Krysttal Motors(P) Ltd, Salem -5 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 1.00 % குறைவாக உள்ளதால் Krysttal Motors(P) Ltd, Salem -5 நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு,, 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1986/2018/இ.1)

பொருள் எண்..2

பட்டுக்கோட்டை நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.22866/பி3/2018, நாள்.23.08.2018ல் இந்நகராட்சி உரக்கிடங்கில் பயோமைனிங் திட்டம் செயல்படுத்திட ரூ.300.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் இப்பணிக்கு கடந்த 07.11.2018ல் வேலை உத்திரவு அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இப்பணியை செயல்படுத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் கூட்ட நடவடிக்கையில் தெரிவித்துள்ளவாறு The Dirctor, Centre for Technology Development and Transfer (CTDT), Anna university , Chennai – 25 அவர்களை இப்பணிக்கு ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி ஆலோசகருக்கு இப்பணியை பார்வையிடவும் , ஆலோசனை கொடுக்க பட்டியல் தொகை ரூ.1,77,000/– செலுத்திட கடிதம் வரப்பெற்றுள்ளது. ஆகவே ஆலோசகர் கட்டணம் ரூ.1,77,000/–ஐ The Dirctor , Centre for Technology Development and Transfer (CTDT) , Anna university , Chennai – 25 அவர்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம்.
2) பட்டியல் தொகை வழுங்கிட தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1986/2018/இ.1)

பொருள் எண்..3

2018–2019 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் கீழ்கண்ட பணிக்கு 11.01.2019 தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | பட்டுக்கோட்டை நகராட்சி, தஞ்சாவூர் பைபாஸ் சாலை அருகில் 9.00 மீட்டர் உயரமுள்ள உயர்மின்கோபுரத்தில் 150 வாட்ஸ் 6 எண்ணிக்கையில் LED விளக்குகளை பொருத்தி அமைக்கும் பணி | 4,00,000/– | Fountain Trading Company, 2328, West 2nd Street, Pudukkottai-1 | 0.00 % மதிப்பீட்டு விலை விகிதம் |
| | | | ABB Fabricators, Aranthangi-3 | 2.38 % அதிகம் |
| 2. | பட்டுக்கோட்டை நகராட்சி, மன்னார்குடி பைபாஸ் சாலை அருகில் 9.00 மீட்டர் உயரமுள்ள உயர்மின்கோபுரத்தில் 150 வாட்ஸ் 6 எண்ணிக்கையில் LED விளக்குகளை பொருத்தி அமைக்கும் பணி | 4,00,000/– | Fountain Trading Company, 2328, West 2nd Street, Pudukkottai-1 | 0.00 % மதிப்பீட்டு விலை விகிதம் |
| | | | ABB Fabricators, Aranthangi-3 | 2.38 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | பட்டுக்கோட்டை நகராட்சி, வடசேரி பைபாஸ் சாலை அருகில் 9.00 மீட்டர் உயரமுள்ள உயர்மின்கோபுரத்தில் 150 வாட்ஸ் 6 எண்ணிக்கையில் LED விளக்குகளை பொருத்தி அமைக்கும் பணி | 4,00,000/– | Fountain Trading Company, 2328, West 2nd Street, Pudukkottai-1 | 0.00 % மதிப்பீட்டு விலை விகிதம் |
| | | | ABB Fabricators, Aranthangi-3 | 2.38 % அதிகம் |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.6128/2016/இ.1) |

**பொருள் எண்..4**

செய்தி மக்கள்தொடர்புதுறை இயக்குநர், சென்னை அவர்களின் 21.12.2018 ந் தேதிய வெளியீட்டு ஆணை எண்.5336 ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்/2018 கடிதத்தில் பட்டுக்கோட்டை நகராட்சியில் சமூகநல சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் கீழ் பட்டுக்கோட்டை நகராட்சியில் 20 இடங்களில் Water ATM அமைக்கும் பணிக்கு மூன்றாம் தவணை ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் மாநில அளவில் பைனான்சியல் எக்ஸ்பிரஸ் மற்றும் தினபூமி நாளிதழிலில் விளம்பரம் செய்தவகையில் தொகை ரூ.18848/–ஐ

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பில் எண் | நாள் |
|---|---|---|---|
| 1) | Accord Advertising Agencies,<br>Suit No.1 &2, 8th Floor,<br>JHAVER PLAZA,<br>1 A Mahatma Gandhi Road,<br>Nungambakkam,<br>Chennai – 600 034. | AAA/1076/18-19 | 26.12.2018 |

வழங்கக்கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: விளம்பரகட்டணம் ரூ.18848/– ஐ பொதுநிதியின்கீழ் வழங்க மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.4490/2018/இ.1)

**பொருள் எண்..5**

செய்தி மக்கள்தொடர்புதுறை இயக்குநர், சென்னை அவர்களின் 10.01.2019 ந் தேதிய வெளியீட்டு ஆணை எண்.217 ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்/2019 கடிதத்தில் பட்டுக்கோட்டை நகராட்சியில் சமூகநல சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் கீழ் பட்டுக்கோட்டை நகராட்சியில் 20 இடங்களில் Water ATM அமைக்கும் பணிக்கு நான்காம் தவணை ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் மாநில அளவில் பைனான்சியல் எக்ஸ்பிரஸ் மற்றும் மாலைமுரசு நாளிதழிலில் விளம்பரம் செய்தவகையில் தொகை ரூ.22730/—ஐ

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பில் எண் | நாள் |
|---|---|---|---|
| 1) | BRIGHT ADVERTISING<br>No.13 Moores Road, Moores Garden,<br>Thousand Lights,<br>Chennai – 600 006. | 6147 | 11.01.2019 |

வழங்கக்கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: விளம்பரகட்டணம் ரூ.22730/— ஐ பொதுநிதியின்கீழ் வழங்க மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.4490/2018/இ.1)

**பொருள் எண்..6**

செய்தி மக்கள்தொடர்புதுறை இயக்குநர், சென்னை அவர்களின் 13.12.2018 ந் தேதிய வெளியீட்டு ஆணை எண்.5187 ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்/2018 கடிதத்தில் பட்டுக்கோட்டை நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டம்-2018-2019 ன்கீழ் 9 எண்ணிக்கையிலான Light commercial vehicle 2.0 cum capacity with box tipper BS4 வாகனம் வாங்குதல் பணிகள் மேற்கொள்ள :மூன்றாம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் மாநில அளவில் மக்கள்குரல் மற்றும் டெக்கான் கிரானிக்கல் நாளிதழிலில் விளம்பரம் செய்தவகையில் தொகை ரூ.71820/—ஐ

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பில் எண் | நாள் |
|---|---|---|---|
| 1) | Accord Advertising Agencies,<br>Suit No.1 &2, 8th Floor,<br>JHAVER PLAZA,<br>1 A Mahatma Gandhi Road,<br>Nungambakkam,<br>Chennai – 600 034. | AAA/1036/18-19 | 18.12.2018 |

வழங்கக்கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: விளம்பரகட்டணம் ரூ.71820/— ஐ பொதுநிதியின்கீழ் வழங்க மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1986/2018/இ.1)

**பொருள் எண்..7**

செய்தி மக்கள்தொடர்புதுறை இயக்குநர், சென்னை அவர்களின் **05.12.2018** ந் தேதிய வெளியீட்டு ஆணை எண்.**5023** ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்/**2018** கடிதத்தில் பட்டுக்கோட்டை நகராட்சியில் FSTP திட்டத்தின்கீழ் (Establishment of 30 KLD Feacal Sludge Treatment Plant at Municipal Compost Yard in Pattukkottai Municipality) பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் மாநில அளவில் தினமணி மற்றும் டெக்கான் கிரானிக்கல் நாளிதழிலில் விளம்பரம் செய்தவகையில் தொகை ரூ.**116550/–**ஐ

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பில் எண் | நாள் |
|---|---|---|---|
| **1)** | Accord Advertising Agencies,<br>Suit No.1 &2, 8th Floor,<br>JHAVER PLAZA,<br>1 A Mahatma Gandhi Road,<br>Nungambakkam,<br>Chennai – 600 034. | AAA/0995/18-19 | 10.12.2018 |

வழங்கக்கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: விளம்பரகட்டணம் ரூ.**116550/–** ஐ பொதுநிதியின்கீழ் வழங்க மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.**4618/2018**/இ.1)

**பொருள் எண்.. 8**

மன்ற தீர்மான எண்.**269** நாள்.**23.11.2016** ன் படி பட்டுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.**10** ல் உள்ள மன்னைநகர் (வளவன்புரம்) பகுதியில் உள்ள வெற்றிடத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்ட மாநில நல வாழ்வு சங்க குழும இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு கடிதம் எண். 1869/ NUHM/ SHS/2015 நாள்.01.09.2015 கடிதத்தில் NHM ROP 2016-2017 நிதியின் கீழ் ரூ.**60** இலட்சம் மான்யமும், நகராட்சி பங்கு தொகை ரூ.**8.00** இலட்சமும் சேர்த்து மொத்த மதிப்பீடு ரூ.**68.00** இலட்சத்திற்கு மேற்கண்ட நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதி அளிக்கப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண்.**97** நாள்.**24.4.2017** ன் படி குறைவான ஒப்பந்தவிலை விகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு எஸ்.கணேசன் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றதில் மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படாத இனமான மருத்துவமனைக்கு நோயாளிகளை கான வரும் உறவினர்கள் வாசலில் உட்காரும் விதமான மின்விசிறிகள், டியூப்லைட்கள், எல்இடி பல்புகள் மற்றும் படிகட்டுகள் இப்பணிகள் கூடுதலாக செய்யவேண்டிய நிலையானதால் இப்பணியினை வேலை உத்திரவு அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.கணேசன் மூலமாக செய்து முடிக்கப்பட்டுவிட்டதனால் இப்பணிக்கு ஏற்பட்ட கூடுதலாக செலவினம் ரூ.**200530/–**ஐ ஒப்பந்ததாரர் திரு.எஸ்.கணேசன் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: கூடுதல் செலவினம் ரூ.**200530/–** பொதுநிதியின் கீழ் வழங்க அனுமதிக்கலாம்.

(ந.க.எண் :**6083/2016**/இ.1)

**பொருள் எண்.. 9**

பாதாளசாக்கடை திட்டம் நிறைவேற்றப்படாத நகராட்சிகளில் Fecal Sludge Treatment Plant (FSTP) அமைக்கும் திட்டத்தினை முன்னிட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.26888/UGGS-2/ 2018–10, நாள்.15.11.2018–ல், Feacal Sludge Treatment Plant (FSTP) கசடு கழிவு மேலாண்மை திட்டம் பட்டுக்கோட்டை நகராட்சி உரக்கிடங்கில் செயல்படுத்திட ரூ.360.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், IUDM-2018-19 மான்யநிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டது.

இப்பணிக்கு ஒரே சிப்பமாக 10.01.2019 ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s MSG Infra | மதிப்பீட்டை விட 5.10% அதிகம் |
| 2) | M/s Oriental Builders | மதிப்பீட்டை விட 5.29% அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள M/s MSG Infra, ஒப்பந்ததாரர் அவர்களிடம் தங்களால் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை குறைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்பேரில், M/s MSG Infra, ஒப்பந்ததாரர் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து தற்போதுள்ள மார்க்கெட் விலை விபரம் மற்றும் பணியாட்களின் கூலி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு தன்னுடைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை குறைத்து கொடுப்பதாக சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அதன்அடிப்படையில் தயார் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s MSG Infra | மதிப்பீட்டை விட 4.97% அதிகம் |
| 2) | M/s Oriental Builders | மதிப்பீட்டை விட 5.29% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M/s MSG Infra, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.85% அதிகமாக உள்ளது. மேற்கண்ட பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரத்தைக் கருதி நகர்மன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி முதல் அழைப்பிலேயே மதிப்பீட்டைவிட 5 சதவிகிதம் கூடுதல் வரை உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம் என நகராட்சி பொறியியல் கையேட்டில் விதி எண்.2.7.2 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு,, 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.4618/2018/இ.1)

**பொருள் எண்.. 10**

தமிழக அரசு உத்திரவின்படி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் 1.1.2019 முதல் தடை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து வணிக நிறுவனங்கள் தொழில் நிறுவனங்கள், சிற்றுண்டி சாலைகள், திருமண மண்டபங்கள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் பொது மக்கள் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்க்கும் வண்ணம் 22.12.2018 முதல் 1.1.2019 முடிய 5 தினங்கள் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.13,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணியின் அவசர அவசியம் கருதி உடன் மேற்கொள்ளும் பொருட்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

3) செலவினத்தை பொதுநிதி மூலம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்..15/2019/எச்1)

**பொருள் எண்.. 11**

முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களது 24.10.2017ம் தேதிய ஆய்வு கூட்ட நடவடிக்கைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவு ந.க.எண்..2571/17/J1, நாள்.. 28.11.17 மற்றும் 23.4.2018ன்படி VBC (Vector Born Disease) தடுப்பு பணிக்காக ஆண்டுதோறும் DBC பணியாளர்கள் 300 Plan என்ற அடிப்படையில் நியமனம் செய்து பணி மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. இதன்படி 300 வீட்டிற்கு ஒரு நபர் வீதம் 21174 வீட்டிற்கு 30 பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளும்போது (30 X 254 X 31) ஒரு மாதத்திற்கு ரூ.2,36,220/– ஆகிறது. மேற்படி பணிக்கு தோராயமாக 3 மாதத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.50 லட்சம் ஆகும். ஆகவே மேற்படி பணிக்கு தற்பொழுது 30 பணியாளர்களை குழு மூலம் நியமித்துக் கொள்ளவும், தேவை ஏற்படின் பணியாளர்களை அதே விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ளவும் அனுமதித்து நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.. 529, நாள்.. 31.10.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டதன் உரிமக்காலம் 31.01.2019உடன் முடிவடைந்ததன் பொருட்டு டெங்கு தடுப்பு பணியின் அவசியம் கருதி மேலும் கூடுதலாக 3 மாதத்திற்கு உரிமம் நீட்டித்து வழங்கவும், அற்கான உத்தேச செலவினம் ரூ.7.50லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) செலவினத்தினை பொது நிதி மூலம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். |
| | 3) டெங்கு தடுப்பு முன்னெச்சரிக்கை பணியின் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.. 4531/2018/எச்1) |

<u>பொருள் எண்.. 12</u>

நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..15, நாள்.. 29.1.2016ன்படி இந்நகர எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் 20 வார்டுகளில் மட்டும் அன்றாட துப்புரவுப் பணி மேற்கொள்வதற்கு தனியார் சுய உதவிக்குழுக்களான பாரதம் சுய உதவிக்குழு, சமுத்திரம் சுய உதவிக்குழு, டாக்டர் அம்பேத்கார் சுய உதவிக்குழு, தூய்மை இந்தியா சுய உதவிக்குழு மற்றும் சுதந்திரம் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 94 நபர்கள் கொண்டு துப்புரவுப் பணி மேற்கொண்டதன் உரிம காலம் 31.1.2017 உடன் முடிவடைந்ததன் பொருட்டு நகர் மன்றம் தீர்மானம் எண்..9, நாள்..31.1.2017ன்படி மேலும் ஓராண்டிற்கு உரிமம் நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் உரிம காலம் 31.1.2018 உடன் முடிவடைவதாலும், மேற்படி 5 சுய உதவிக்குழுக்கள் தங்களது உரிம காலத்தை அதே ஊதிய விகிதத்தின்படி மேலும் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க கடிதத்தின் வழியே தெரிவித்துள்ளனர். தற்பொழுது தூய்மை இந்தியா திட்ட பணிகள் நகரின் விரிவாக்க பணிகள், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் போன்றவற்றிற்காக பணியாளர்களின் தேவை நிமித்தம் காரணமாக இரண்டு மாதத்திற்கு மட்டும் தற்காலிகமாக மேற்படி தனியார் சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்ள நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..322, நாள்..31.1.18ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிம காலம் 31.5.2018 உடன் முடிவடைவதால் அன்றாட பொது சுகாதார பணியின் அத்தியாவசியம் கருதி 1.6.2018 முதல் 31.7.2018 வரை கூடுதலாக இரண்டு மாதத்திற்கு நீட்டிப்பு செய்து நகர்மன்றத் தீர்மான எண்..430, நாள்.. 29.5.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிமக் காலம் 31.7.2018உடன் முடிவடையும் பொருட்டு பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசியம் கருதி கூடுதலாக இரண்டு மாதத்திற்கு 1.8.2018 முதல் 30.09.2018 வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்யப்பட்டது. இதன் உரிம காலம் 30.9.2018 உடன் முடிவடைவதன்பொருட்டு மேலும் கூடுதலாக இரண்டு மாதத்திற்கு 1.10.2018 முதல் 30.11.2018 வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்ற தீர்மானம் எண்..502, நாள்.. 20.9.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் உரிம காலம் 30.11.2018 உடன் முடிவடைய உள்ளதன் பொருட்டு கூடுதலாக 2 மாதத்திற்கு 1.12.2018 முதல் 31.01.2019 வரை அதே விலைவிகிதத்தில் உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தனது தீர்மான எண்..560, நாள்.. 30.11.2018ன்படி அனுமதி வழங்கி உரிமக்காலம் 31.1.2019உடன் நிறைவடைந்ததன் பொருட்டு கூடுதலாக 1.2.2019 முதல் 31.3.2019வரை 2 மாதத்திற்கு மட்டும் உரிமத்தினை நீட்டிப்பு செய்தும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.15.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) தனியார் சுய உதவிக்குழுக்களின் உரிம காலம் முடிவடைந்ததன் பொருட்டும், பொது சுகாதாரத்தின் அத்தியாவசியம் கருதி மேலும் 2 மாதத்திற்கு 1.2.2019 முதல் 31.3.2019வரை அதே ஊதிய விகிதத்தின்படி நீட்டிப்பு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) அன்றாட பொது சுகாதாரத்தின் அத்தியாவசியம் கருதி துப்புரவுப் பணி மேற்கொள்ளும்பொருட்டு தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம். |
| | 4) உத்தேச செலவு தொகை ரூ.15.00 லட்சத்திற்கு பொது நிதி மூலம் பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..7150/15/எச்1) |

**<u>பொருள் எண்.. 13</u>**

அரசாணை எண்..78, நாள்.. 4.5.2017ன்படி வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையின்படி பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள மனைகளை முறைப்படுத்த ஆணை வரப்பெற்றுள்ளது. அதன்பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் நடத்தப்பெற்ற ஆய்வுக்கூட்டங்களில் அனுமதியற்ற மனைப்பிரிவு வரைபடங்கள் முழுமையும் கணினி மூலம் (AUTO CADD) வரைபடம் தயார் செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு சமர்ப்பிக்குமாறும், நகரில் முக்கிய இடங்களில் விளம்பர போர்டுகள் அமைக்குமாறும் , ஆட்டோ விளம்பரங்கள் மூலம் பொது மக்களுக்கு தெரியப்படுத்துமாறும், துண்டு பிரசுரங்கள் மூலம் மனைப்பிரிவில் உள்ள உரிமையாளர்களுக்கு வீடு வீடாக சென்று திட்டத்தினை தெரிவிக்குமாறும் மேற்படி கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்பேரில், இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையப்பெற்றுள்ள மனைகளை (AUTO CADD) மூலம் விடுபட்ட மனைப்பிரிவு வரைபடங்களை தயார் செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு சமர்ப்பிக்கவும், பொது மக்கள் அறியும் வண்ணம் நகரில் முக்கிய இடங்களில் விளம்பர போர்டுகள் வைத்தமைக்கும், மைக் மூலம் விளம்பரம் செய்தமைக்கும், நோட்டீஸ் மூலம் மனை உரிமையாளர்களுக்கு சிறப்பு முகாம் நடத்தியமைக்கும், மேற்படி முகாம்களை புகைப்படம் எடுத்தமைக்கும் உண்டான செலவினத் தொகை ரூ.1,30,000/—க்கும், மேற்படி பணிகளை அவசர அவசியங் கருதி இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு.R.கருப்பையன் அவர்கள் மூலம் செய்து முடிக்கவும், முடிவுற்ற பணிகளுக்கு அன்னாருக்கு தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு ..** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்..3115/2007/எப்1)

**<u>பொருள் எண்.. 14</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி பகுதியில் 16.11.2018 அன்று விடியற்காலை சுமார் 1.30 மணி முதல் 5.00 வரை வீசிய புயல் காற்று கஜாபுயல்—2018 காரணமாக நகரில் ஏராளமான மின்கம்பங்கள், மின்மாற்றிகள் ஆகிய பழுது ஏற்பட்டதாலும், உடைந்த மின் கம்பங்கள் (L.T & H.T) மற்றும் Transformers ஆகியவைகள் பழுது ஏற்பட்டதனால் தமிழ்நாடு மின்வாரியத்தினால் சீர் செய்ய இயலாமல் போன காரணத்தினால் நகரில் முற்றிலும் மின் விநியோகம் தடைபட்டது.

ஆகவே, பொதுமக்களுக்கு கொடுக்கப்படும் அத்தியாவசிய தேவையான குடிநீர் விநியோக பணிக்கு மின் வசதி இல்லாத காரணத்தினால், நகரில் பொதுமக்களுக்கு குடிநீர் தேவையை உடனடியாக பூர்த்தி செய்து கொடுக்கும் பொருட்டு மூன்று தலைமை நீரேற்று நிலையங்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், ஆழ்குழாய் கிணறுகள் உள்ள

பகுதிகளில் ஜெனரேட்டர் பொருத்தி மின்விநியோகம் கொடுத்து அதன் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்துகொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதினால் மின் விநியோகம் செய்ய ஜெனரேட்டருக்கு டீசல் விநியோகம் செய்து கொடுக்க (16.11.2018 முதல் 30.11.2018 வரை) ரூ.20.00லட்சம் செலவிற்கு பட்டுக்கோட்டை நகராட்சிக்கு கடந்த 15 ஆண்டுகளாக டீலராக உள்ள M/s.ஜி.கோதண்டபாணி ஏஜென்சீஸ் நிறுவனம் மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதன்பேரில் மேற்படி நிறுவனத்திற்கு மீண்டும் (01,12,2018 முதல் 05.12.2018 வரை) டீசல் விநியோகம் செய்திட அகும் கூடுதல் செலவினம் ரூ.2.50லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : குடிநீர் நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4107/2018/இ1)

தனி அலுவலர்/ஆணையர்,
பட்டுக்கோட்டை நகராட்சி.

## பட்டுக்கோட்டை நகராட்சி

ஸ்ரீ விளம்பி வருடம் மார்கழி மாதம் 25–ம் தேதி திருவள்ளுவராண்டு 2047 (2019–ம் ஆண்டு ஜனவரி 9ம் தேதி) புதன் கிழமை காலை 12.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை.. திரு. சே.அலாவுதீன், எம்.ஏ.,
தனி அலுவலர்/ ஆணையர்.

**பொருள் எண்..1**

பட்டுக்கோட்டை நகராட்சியில் உள்ள கீழ்கண்ட சாலைகளை மேம்பாடு செய்து தார்சாலையாக மாற்றிடவும் மற்றும் பழுதடைந்த நிலையில் உள்ள தார்சாலையை புதுப்பித்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl. No. | W. No. | Name of Work | Type of Work (BT/ CC) | Length in KM | Width in Meter | Estimate Cost Rs. Lakhs |
|---|---|---|---|---|---|---|
| **PACKAGE - I** | | | | | | |
| 1 | 10 | Ward.10 Mannai nagar 1,2,3 & Ayyar thoppu | BT | 0.795 | 4.00 | 200.00 |
| 2 | 11 | Ward.11 Maniyarpuram road | BT | 0.370 | 5.00 | |
| 3 | 16 | Ward.16 Rajappa nagar | BT | 0.600 | 4.50 | |
| 4 | 16 | Ward.16 Vandipettai road | BT | 0.250 | 4.50 | |
| 5 | 16 | Ward.16 Sowkandi street | BT | 0.330 | 6.00 | |
| 6 | 17 | Ward.17 Kottai keelamedu | BT | 0.170 | 7.00 | |
| 7 | 25 | Ward.25 Vaithithoppu main road | BT | 0.260 | 4.00 | |
| 8 | 25 | Ward.25 Nadiyambalpuram westlane | BT | 0.370 | 4.00 | |
| 9 | 27 | Ward.27 OHT to Gandhi nagar Jn. | BT | 0.480 | 4.00 | |
| **PACKAGE - II** | | | | | | |
| 10 | 27 | Ward.27 Oxford school | BT | 0.510 | 4.00 | 200.00 |
| 11 | 28 | Ward.28 Burial ground road | BT | 0.400 | 4.00 | |
| 12 | 29 | Ward.29 Nadiyamman koil road | BT | 0.880 | 8.00 | |
| 13 | 29 | Ward.29 Ayyappan koil road | BT | 0.410 | 4.50 | |
| 14 | 30 | Ward.30 Sivakollai river bund road | BT | 0.210 | 4.00 | |
| 15 | 31 | Ward.31 Amman nagar | BT | 0.650 | 4.00 | |
| | | **Total Project Cost** | | **6.685** | | **400.00** |

அலுவலக குறிப்பு:

1) மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாடு திட்டம் (IUDM-2018-19) ன் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.138/2019/இ.1)

தனி அலுவலர்/ஆணையர்,
பட்டுக்கோட்டை நகராட்சி.